ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

சரமசுலோகச்சுருக்கு

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

சரமசுலோகச்சுருக்கு

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

‡ கல்லார் அகலும் ⋆
கருமமும் ஞானமும் காதலும் ⋆
மற்றெல்லா நிலைகளுக்கேற்ப ⋆
விதித்த கிரிசைகளும் ⋆⋆
வல்லார் முயல்க ⋆
வலி இழந்தார் என் தனைத் தொழுகென்று ⋆
எல்லாத் தருமம் உரைத்தவன் ⋆
இன்னடி சேர்ந்தனமே ॥ **1** ॥

வெறுமை உணர்ந்தது முன்னிட்டு ⋆
வேறங்கம் இல்லை எனக் ⋆
குறியவன் இன்னறவெட்டக் ⋆
குறித்திடும் கோணை துறந்து ⋆⋆
உறும் அயன் அத்திரம் என்னப் ⋆
பொறா நிலை ஓர்ந்திட ஓர் ⋆
அற நெறி அன்றுரைத்தான் ⋆
அழியா அறமாயினனே ॥ **2** ॥

வாரிதி விட்டு ⋆
மலர்மகளோடு மதுரை வந்து ⋆
பாரத வெஞ்சமர் ⋆
பார்மகள் பாரம் செக உகந்து ⋆⋆
சாரதியாய் முன்பு தூதனுமாய்த் ⋆
தளரும் விசயன் ⋆
தேரதில் நின்றவனைத் ⋆
தேற்றினான் திறம் ஆயினமே ॥ **3** ॥

தன் அருளால் பெறும் சாதனம் ⋆
சாதகன் என்றிவற்றைத் ⋆
தன்னுடன் எண்ணுதல் நீங்கத் ⋆
தனித்தொரு சாதனமாய்ப் ⋆⋆
பொன் அருளோடும் அப்பூமகளோடும் ⋆
புகழ நின்ற ⋆
இன்னுரை ஈசனையே ⋆
ஏகம் எண்ண இசைந்தனமே ॥ **4** ॥

ஊனில் இணைத்துழல்விக்கும் ⋆
வினைக் கடலுள் விழுந்த ⋆
யான் எனதான குணங்கள் ⋆
எனக்கிசை நல் வழியும் ⋆⋆
தான் உதவித் தனைத் தந்திட நின்ற ⋆
தனித் தருமம் ⋆
நான் இனி வேறோர் பரம் ⋆
நணுகாவகை நல்கியதே ॥ **5** ॥

கடு வினை நாம் பெறும் பேற்றைத் ⋆
தகைந்தமை கண்டு நம்மேல் ⋆
தொடை விலகாமல் இசைந்து ⋆
ஒரு காலம் துணிவுடனே ⋆⋆
உடைமை அடைக்கலமாக ⋆
அடைக்கும் உகப்பதனால் ⋆
அடை என என்றுரைத்தான் ⋆
அடைவித்தனன் தன் அடியே ॥ **6** ॥

கான் என்ற வேதங்கள் ⋆
காக்கும் பரன் என்று காட்ட நின்றோன் ⋆
தான் என்றறியகிலார்க்கு ⋆
அறிவிக்கும் தனித் திறலோன் ⋆⋆
வான் ஒன்றினாரொடு ⋆
மானிடன் என்ன அவதரிப்பான் ⋆
நான் என்ற நம் திருமால் ⋆
நம்மை நற்பதம் சேர்த்திடுமே ॥ **7** ॥

தன்னிலை காட்டித் ⋆
தனிமை உகந்து தனித் தகவால் ⋆
அன்னிலை தீர அடைக்கலம் கொண்டு ⋆
அடி சேர்த்திடவே ⋆⋆
பன்னிலை மூல எழுத்திலும் ⋆
பாண்டவன் தேர் தனிலும் ⋆
முன்னிலை கொண்ட பிரான் ⋆
எம்மை முன்னிலை கொண்டனனே ॥ **8** ॥

காடுகளோ நரகோ ⋆
கடிதாம் கரளத் திரளோ ⋆
சூடு விடா அனலோ ⋆
தொலையா நிலை நள் இருளோ ⋆⋆
சாடு படச் சரணால் ⋆
அன்று சாடிய சாரதியார் ⋆
வீடு செய்வித்து நம்மை ⋆
விடுவிக்கின்ற பாவங்களே ॥ **9** ॥

‡ சென்றுயர் வான் அமர்ந்து ⋆
அவ்வடியாருடன் சேர்ந்திடவே ⋆
இன்றெனில் இன்று ⋆
நாளை எனில் நாளை இனிச் செறிந்து ⋆⋆
நின்ற நிலை நின் அனைத்து வினையும் ⋆
நின் விட்டகலக் ⋆
கன்றி விடுப்பன் என்றான் ⋆
கருத்தால் நம்மைக் காத்திடுமே ॥ **10** ॥

‡ அறிவும் அனைத்தும் இலா அடியோமை ⋆
அடைக்கலம் கொண்டு ⋆
உறவென நின்றதெல்லாம் ⋆
உறவே நின்ற தான் எமக்காய் ⋆⋆
மறு பிறவித் துயர் வாராவகை ⋆
மனம் கொண்டகலா ⋆
இறையவன் இன் அருளால் ⋆
எங்கள் சோகம் தவிர்த்தனனே ॥ **11** ॥

அடிவரவு — கல்லார் வெறுமை வாரிதி தன்னருள் ஊனில் கடுவினை கான் தன்னிலை காடு சென்று அறிவு கருமம்

சரமசுலோகச்சுருக்கு முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்